37

ஆப்பிரிக்க நாடுகள் வரிசை 3

# எத்தியோப்பியா



157
3.65

V6A
N65
572

'சோமலெ'

ஆப்பிரிக்க நாடுகள் வரிசை—3

# எத்தியோப்பியா

'சோமலெ'

பாரி நிலையம்
59. பிராட்வே • சென்னை-1.


முதற் பதிப்பு : மார்ச், 1965.

விலை 60 காசு

Library Classification
Dewey Decimal No. *919.1*

மாருதி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை-14.

எத்தியோப்பியா ஆப்பிரிக்காவின் சுவிட்சர்லந்து. பழமையும் பெருமையும் நிறைந்தது. புத்துணர்ச்சியும் பொலிவும் பெற்று வருகிறது. மக்களையும் உயிரினங்களையும் பற்றி சுவைபடக்கூறி இந் நாட்டை இந்நூல் நமக்கு அறிமுகப் படுத்துகிறது.




இப்படத்தில் தனியாகக் காட்டப்பட்டிருக்கும் எரிட்ரியா, எத்தியோப்பியாவின் ஒரு மாநிலமாகி விட்டது.

(விவரம் : பக்கம் 8-இல் காண்க)

# எத்தியோப்பியா

- எத்தியோப்பியா ஒரு கிறித்தவ நாடு. இங்குள்ளவர்கள் தொன்று தொட்டே கிறித்தவர்கள். பிறரால் மதம் மாற்றப்பெற்றவர் அல்லர்.
- எகிப்துக்கு அடுத்தபடியாக ஆப்பிரிக்காவில் பழமையான நாடு. இது 3000 ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றை உடையது.
- இயேசு பிறந்த காலத்தில் ஆட்சி செய்த அரசர் வழியினரே இன்றும் இங்கு செங்கோல் செலுத்துகின்றனர்.
- ஏனைய ஆப்பிரிக்க நாடுகளினின்றும் நாகரிகத்தில் வேறுபட்டது.
- இந்தியத் தொடர்பும் சாயலும் நிரம்பியது.
- 1936 முதல் 1941 வரை ஐந்து ஆண்டுகள் மட்டுமே அடிமைப்பட்டிருந்தது.

இந்த நாட்டின் சட்ட திட்டத்தில் நாட்டின் பெயர் ''யா இத்யோப்பியா நிகுச நகஸ்ட் மங்கிஸ்ட்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அபிசீனியா என்றும் எத்தியோப்பியா என்றும் வழங்கப்படும் இந்நாடு எங்கே இருக்கிறது? ஆப்பிரிக்காவின் படத்தைப் பார்ப்போம்.

இந்தியாவிலிருந்து கப்பல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குப்போக சூயஸ் கால்வாய் வாயிலாகச் செல்ல வேண்டும். இந்தக் கால்வாய்க்குக் கிழக்கே செங்கடலும் மேற்கே மத்தியதரைக் கடலும் உள்ளன. செங்கடலினை எல்லையாக உடைய எரிட்ரியா தனி நாடாக இருந்து எத்தியோப்பியாவின் ஒரு பகுதியாகிவிட்டது. கென்யா, உகண்டா, சூடான், எகிப்து ஆகிய நாடுகள் எத்தியோப் பியாவைச் சூழ்ந்துள்ளன. மலைகள் மிகுந்து இயற்கை எழில் கொழிக்கும் காரணத்தால் இந்த நாட்டை ஆப்பிரிக்காவின் சுவிட்சர்லந்து என்று சொல்லலாம்.

## பரப்பு

எத்தியோப்பியாவின் பரப்பு ஏறத்தாழ 4,50,000 சதுர மைல் ஆகும்; அல்லது தமிழ் நாட்டைப்போல ஒன்பது பங்கு.

## மாநிலங்கள்

இவ்வாறு பரந்து விரிந்து கிடப்பதால், இந்நாடு பதினான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் நடுநாயகமாக இருப்பது "சோவா" எனப் படும் மாநிலம். இதில்தான், எத்தியோப்பியாவின் தலை நகரமாகிய அட்டிஸ் அபாபா இருக்கிறது.

எனவே, இந்தியா போலன்றி, இந்த நாட்டின் தலை நகரம் எல்லா மாநிலத்தாருக்கும் நடுவே, சம தொலைவில், மையமாக அமைந்திருப்பது கருத்திற் கொள்ளத்தக்கது.

இனி, ஒவ்வொரு மாநிலத்தைப் பற்றியும் சிறிது கூறுவோம்.

உயர்ந்த மலைகளும் சிறுத்தைகளும் அரிமாக்களும் நிறைந்தது அருஸ்ஸி மாநிலம், பேல் என்பது தென்

பகுதியில் அமைந்து, இயற்கையான குகைகளாலும் குறிஞ்சி நில உயிரினங்களாலும் புகழ்பெற்றது.

ஏரிகளும் வரலாற்றுச் சின்னங்களும் பழம் பெருமை யுடைய நகரங்களும் கொண்டது, சூடான் எல்லையருகே உள்ள பெகம்டர் மாநிலம்.

பருத்திவிளையும் கெமுகோபா மாநிலம், ஊதா நைல் ஆறு பாய்ந்து கோட்டை கொத்தளங்கள் நிறைந்த கோஜ்ஜாம் மாநிலம், பரப்பளவில் பெரியதும் தரமான காப்பிக்கொட்டை விளைச்சலில் புகழ் மிக்கதுமாகிய ஹரார்ஜ் மாநிலம் ஆகியவையும் குறிப்பிடத்தக்கன.

முதலைகள் மிகுந்த ஆறுகள்; காடுகளில் மரங்களி லிருந்து அப்படியே மேசை, நாற்காலி, கட்டில்களாகச் செதுக்கிவிடும் தச்சர்கள், இவ்விரு சிறப்புக்களும் உடையது இல்லுபபோர் மாநிலம்.

காப்பி என்ற சொல்லின் மூலச் சொல் கப்பா. கப்பா மாநிலம் காப்பித் தோட்டங்கள் மிகுந்தது; யானை முதல் நீர் எருமை வரை பல்வகை உயிரினங்கள் திரியும் பகுதி இது.

சிடாமோ மாநிலம் கால்நடைச் செல்வமும் கனி வளச் செல்வமாகிய தங்கச் சுரங்கமும் உடையது.

டைக்ரே மாநிலம் எரிட்ரியாவுக்கு அருகே இருக் கிறது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகிய ஆக்சம் நகரம், நீண்டுயர்ந்த எரிமலைகள், கிடு கிடு பாதாளங்கள் பள்ளத்தாக்குகள் —இவைதான் இம் மாநிலத்தின் சிறப்புக்கள்.

வோல்லிகா மாநிலம் மண் வளம் நிறைந்தது. பயிர்த் தொழிலோடு சுரங்கத் தொழிலும் இங்கு ஏற்றம் பெற்றிருக்கிறது.

## எரிட்ரியா

எத்தியோப்பியாவின் வட கோடியில் அமைந்தது எரிட்ரியா. இது 65 ஆண்டுக் காலம் இத்தாலிய ஆட்சியிலிருந்தது. 1952-இல் ஐக்கிய நாடுகள் அவையின் முடிவுப்படி எரிட்ரியா எத்தியோப்பியாவுடன் இணைந்து அதன் ஒரு மாநிலமாக இருந்து வருகிறது.

எரிட்ரியாவின் பரப்பு 47,875 சதுர மைல். அதாவது, தமிழ் நாட்டின் பரப்புக்குச் சமமானது. மக்கள் தொகை 11 இலட்சம், தலை நகர் ஆஸ்மாரா.

எரிட்ரியா இரு பகுதிகளாக இருக்கிறது. ஒரு பகுதி வால்போல் நீண்டது. மற்றொன்று மலைப் பகுதியிலிருந்து நைல் பாயும் பகுதி வரை சரிவாக அமைந்தது.

எரிட்ரிய மக்கள் நாடோடிகளாக உள்ளனர். அவ்வப்போது கால் நடைகளைப் பேணியும் காட்டில் கிடைக்கும் பொருள்களைச் சேகரித்து விற்றும் இவர்கள் வயிறு வளர்த்து வருகின்றனர். இத்தாலியர் காலத்தில் இங்கு சில பகுதிகளில் பருத்தியும் உணவுப் பொருள்களும் பயிரிடப்பட்டன. மலைப்பாங்காக இருப்பதால் தண்ணீர் தங்கும் பகுதியில் மட்டுமே விவசாயம் செய்ய இயலும்.

மஸ்ஸாவா, அஸ்ஸாப் என்ற இரு துறைமுகங்கள் எரிட்ரியாவில் இருக்கின்றன. இவற்றின் வழியாகத் தான் எத்தியோப்பியாவின் வெளிநாட்டு வாணிபம் அனைத்தும் நடைபெறுகிறது. 1952-க்கு முன் சோமாலிலந்திலுள்ள திபவுட்டி என்ற துறைமுகத்தின் வாயிலாகத்தான் எத்தியோப்பியாவின் வாணிபம் நடைபெற்றது. மஸ்ஸாவா பெரிய துறைமுகம். அங்கிருந்து தலைநகரான அஸ்மராவுக்கு இரயில் பாதையும் சூடான் நாட்டு எல்லை வரை நெடுஞ்சாலைகளும் உள்ளன,

அட்டிஸ் அபாபாவிலிருந்து அஸ்மராவுக்குச் செல்லும் பாதையில் இரு மருங்கிலும் கண்ணுக்கினிய காட்சிகள் மிகுதி.

## தலைநகர்

எத்தியோப்பிய நாட்டின் தலைநகர் அட்டிஸ் அபாபா. இதுவே இந்நாட்டின் பெரிய நகரம். மக்கள் தொகை ஐந்து இலட்சத்திற்கும் குறைவு.

இந்நகர் 8,000 அடி உயரத்தில் (உதகமண்டலத்தைப்போன்று) இருக்கிறது. எனவே, இங்கு எப்போதும் குளிராக இருக்கும்.

இந்நகரில் வென்னீர் ஊற்றுக்கள் மிகுதி. இதனால் ''பின்பின்னி'' என்ற காரணப் பெயர் இவ்வூருக்கு விளங்கிற்று. அட்டிஸ் அபாபா என்பது புதிதாக ஏற்பட்ட பெயர். இச் சொற்றொடருக்குப் ''புதுப் பூ'' என்று பொருள். இந்தப் பூ 75 ஆண்டுகளுக்கு முன் பூத்தது. 1898-இல் இந்நகர், எத்தியோப்பியப் பேரரசரால் தலைநகராக அறிவிக்கப்பட்டது. அதற்குமுன் ஆக்சம், மெரோ, கோண்டார், அங்கோபார் என்ற நகர்கள் அடுத்தடுத்து எத்தியோப்பியத் தலைநகரமாக இருந்தன.

இந்நகரில் பழமையும் புதுமையும் விரவிக் காணப்படுகின்றன. குதிரை வண்டிகளும் மோட்டார் வாகனங்களும் புத்தம் புதிய ஆகாய விமானங்கள் இயங்கும் விமான நிலையமும் இங்கு உள்ளன. ஆடு மாடுகள் தெருக்களில் திரிகின்றன.

ஓங்கி வளர்ந்துள்ள நீலகிரித் தைல மரங்களைப் பின்னணியாகக் கொண்டு மண் குடிசைகளும் அவற்றை அடுத்து அமெரிக்காவில் கட்டப்படுவன போன்ற மாட மாளிகைகளும் இருக்கின்றன. இந்தக் கவினுறு கட்டிடங்கள் பெரும்பாலும் அரசாங்கத்தாரால் கட்டப்

பட்டவையே. இவற்றுள் குறிப்பிடத் தக்கது "ஆப்பிரிக்காவின் பொருளாதார வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகள் நிறுவன"த்தின் தலைமை யலுவலகம். இம் மாளிகையில் உள்ள பெரு மன்றம், ஆப்பிரிக்க மண்டபம் என்ற பெயருடையது.

பல நாட்டு மக்களும் பல்வேறு இனத்தவர்களும் இந் நகரில் வாழ்கின்றனர். எனினும், கிழக்கு ஆப்பிரிக்க, நடு ஆப்பிரிக்க நகரங்களில் நிகழ்வதுபோன்ற இனப் பாகுபாட்டு உணர்ச்சிகள் இங்கு நிலவுவதில்லை. எல்லோரும் ஒற்றுமையாக இருந்து ஒருவர்க்கொருவர் அன்புடன் நடந்து கொள்ளுகின்றனர்.

இந்த நாட்டின் மொழி அம்ஹாரிக். எனினும் ஆங்கில, பிரெஞ்சு, இத்தாலிய, கிரேக்க, அர்மீனிய, அரபு, ஜெர்மன், சுவீடிஷ் மொழிகள் பேசும் சிறுபான்மையோர் ஏராளமாக உள்ளனர்.

அரசாங்க அலுவல்களை யொட்டிப் பாராளுமன்றக் கட்டிடங்களும் அரண்மனைகளும் உள்ளன. அரசாங்க வேலைகள், ஆப்பிரிக்க நாடுகளின் பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் பெருக்கத்துக்கு ஏற்ப, நகரம் விரிவடைந்திருக்கிறது; சுற்றிலுமுள்ள மீன் பிடி சிற்றூர்கள் சேர்ந்து சென்னைமாநகரம் உருவானதுபோல, அட்டிஸ் அபாபாவும் வளர்ச்சியடைந்திருக்கிறது.

ஆகாய விமானப் போக்குவரத்து வசதிகள் இந் நகரில் பல்கிப் பெருகியுள்ளன; பம்பாயிலிருந்து பறந்தால் ஒரு மணி நேரத்தில் அட்டிஸ் அபாபாவை அடைந்துவிடலாம்.

**மக்கள்**

எத்தியோப்பியாவின் மக்கள் தொகை இரண்டரைக் கோடி இருக்கலாம், புள்ளி விவரக் கணக்கு ஒழுங்காக இல்லாததால், உறுதியாகச் சொல்ல இயலவில்லை.

உலகம் இப்போது உருண்டை வடிவமாக இருப்பினும் ஒரு காலத்தில் தட்டையாக இருந்ததாகவும், அதன் வெளி விளிம்பாக எத்தியோப்பியா விளங்கியதாகவும், எனவே எகிப்து, சிரியா, அரேபியா போன்ற நாடுகளின் மக்களைவிட எத்தியோப்பியர் பழமையானவர்கள் என்றும் காலத்தால் எத்தியோப்பியர், கிரேக்கருடன் வைத்து எண்ணத்தக்கவர் என்றும் தொல்பொருள் அறிஞர் கருதுகின்றனர்.

மலைநாடாகிய நீலகிரி மாவட்டம் தமிழ்நாட்டின் பிறபகுதிகளுடன் சென்ற நூற்றாண்டுவரை நெருங்கிய தொடர்பு கொள்ளாமல் தனித்து இருந்தது. இதனால் அங்கு வாழும் தோதர், படகர் போன்ற மக்கள் வெளியார் உறவு இன்றித் தன்னந்தனியே வாழ்ந்துவரலாயினர். இவ்வாறே எத்தியோப்பிய மக்களும் ஒரு சிறு தீவில் வாழும் மக்கள் கூட்டம் போன்று ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகள் இருந்திருக்கின்றனர்.

எத்தியோப்பியர், நீக்ரோ இனத்தவர் அல்லர்; ஹெமிடிக், நீக்ரோ என்ற இருஇனங்களின் கலப்பாக உருவானவர்களே எத்தியோப்பியர் என்று கருதப்படுகிறது.

பழமைச் செய்திகளாக இம்மக்கள் பற்றித் தெரிவது இவர்களை ஆண்ட ஷீபா அரசி, ஜெருசேலத்திற்குச் சென்று சாலமன் மன்னருக்கு விலையுயர்ந்த நறுமணப் பொருள்களையும் தங்கத்தையும் வயிரம் இரத்தினம் முதலியவற்றையும் அன்பளித்தாள் என்பதே ஆகும். இவர்கள் இருவருக்கும் பிறந்த முதலாம் மெனெலிக் மன்னனின் வழியினரே இன்றளவும் இந்நாட்டை ஆட்சி செய்து வருகின்றனர்.

**சமயம்**

எத்தியோப்பிய மக்கள் செம்மையான சமயம் எதுவுமின்றி, நெடுங்காலம் வாழ்ந்தனர். இயற்கையை வழி

பட்டனர். முதலாம் மெனெலிக் மன்னர் காலத்தில் இங்கு யூதசமயம் பரவிற்று. கி. பி. 330 அளவில் கிறித்தவ சமயம் இந்நாட்டில் கால்கொண்டது.

இங்கே பரவிய சமயத்துக்கு, காப்டிக் கிறித்தவம் என்று பெயர். இச்சமயத்தினருக்கு, தொன்று தொட்டு இந்நாட்டு நிலக்கிழார்கள்பெரிய அளவில் சொத்துக்களை வழங்கியுள்ளனர். காஞ்சி காமகோடி போன்ற ஆதீனங்களுக்கு இருப்பதுபோலவே, காப்டிக் கிறித்தவ அமைப்பிற்கு எத்தியோப்பியாவில் அளவு கடந்த சொத்துக்கள் இருக்கின்றன. எத்தியோப்பியாவின் மொத்த நிலப் பரப்பில் ஐந்தில் இரண்டு பங்கு காப்டிக் கிறித்தவ சமய அமைப்புக்குச் சொந்தமாக உளது. இச்சமயத்துச் சடங்குகள் கீஜீஸ் மொழியில் (தமிழ்நாட்டுக் கோயில்களில் வடமொழியில் வழிபாடு நிகழ்வது போன்று) நிகழ்கின்றன.

இந்தச் சமயத்தினர் எத்தியோப்பியாவில் பெரும்பான்மையினராக இல்லாவிட்டாலும், செல்வாக்கு மிக்கவர்களாக இருக்கின்றனர். பேராற்றல் படைத்தவரும் பேரரசருமாகிய ஹெய்லி செலாசி இச்சமயத்தினராக இருப்பது இதற்கு ஒரு காரணம் ஆகும். இச்சமய அமைப்பின் தலைமை நிலையம், எகிப்திலிருந்து செயல்படுகிறது.

10,000 க்கு மேற்பட்ட தொடக்கப் பள்ளிகளையும் நூற்றுக்கணக்கான ஏனைய கல்வி நிலையங்களையும் இச்சமயத்துக் குருமார்கள் நடத்துகின்றனர்.

பிற்காலத்தில் இங்கு வந்த சோமாலிலந்து முஸ்லிம்கள் சில இடங்களில் கிறித்தவ சமயத்துச் சின்னங்களை அழித்துவிட்டதாகக் கூறப்படுகிறது. 16-ம் நூற்றுண்டளவில் முஸ்லிம்கள் பெருந்தொகையினராக எத்தியோப்பியாவுக்கு வருகை புரியவும் இங்குள்ளவர்களை

மதம் மாற்றவும் முனைந்தனர். அப்போது எத்தியோப்பிய அரசர், போத்துக்கல் நாட்டுப் படையினர் துணையுடன் அவர்களை எதிர்த்துப் போரிட்டார். இதன் விளைவாக, போர்த்துகீசியர் செல்வாக்குப் பெருகிற்று. பிறகு போர்த்துகீசியரான ஜெஸ்யூட் கிறித்தவர்கள்மீது வெறுப்பு உணர்ச்சி ஏற்பட்டு, தம் நாட்டைவிட்டு அந் நாட்டினர் அனைவரையும் விரட்டுமாறு அரசர் ஆணை பிறப்பித்தார்.

காடுகளில் உள்ள தெய்வங்களை வழிபடுபவர் களும் முஸ்லிம்களும் எத்தியோப்பியாவில் ஏராளமாக உள்ளனர்.

எத்தியோப்பியாவுக்கு வடக்கேயும் கிழக்கேயும் முஸ்லிம் நாடுகள் உள்ளன. தெற்கே, நீக்ரோ இனத்தார் ஆளும் நாடுகள் அமைந்துள்ளன. இவ்விரு இனத்த வரின் நாகரிகத்தினின்றும் மாறுபட்ட தனித்த இயல்பு எத்தியோப்பியரிடம் காணப்படுகிறது.

## மொழி

எத்தியோப்பியரின் மொழி அம்ஹாரிக். இதுதான் இந்நாட்டின் அரசாங்க மொழி. சமயச் சடங்குகள் கீஜிஸ் என்ற மொழியில் நிகழ்கின்றன. இது, வடமொழி இலத்தீன் போன்று பேச்சு வழக்கு இழந்த மொழி. டிக்ரின்யா, கல்லின்யா என்ற மொழிகளும் வழங்கு கின்றன.

வெளிநாட்டு மொழியான ஆங்கிலம், எத்தியோப்பி யாவில் இரண்டாம் வகுப்பிலிருந்து கட்டாயமாகக் கற்பிக்கப்படுகிறது; ஐந்தாம் வகுப்பிலிருந்து பிரெஞ்சு மொழி பயிலவும் வாய்ப்பு நல்கப்படுகிறது.

அம்ஹாரிக் மொழியைவிட கீஜீஸ் மொழி மிகப் பழமையானது; தொன்மையான இலக்கியங்களும்

விவிலிய நூலும் இம் மொழியில் உள்ளன. கலையும் நாகரிகமும் இம் மொழியின் வாயிலாகப் பரவின.

கீஜ்ஸ் மொழியிலிருந்துதான் அம்ஹாரிக் தோன்றியது என்பர். அம்ஹாரா என்ற பகுதியில் தோன்றியதால் அம்ஹாரிக் என்னும் பெயர் ஏற்பட்டது. அம்ஹாரிக் மொழி, 12-ம் நூற்றாண்டிலிருந்து எத்தியோப்பிய மக்கள் பேசும் மொழியாக நிலவி வருகிறது. இது சொல் வளம் நிறைந்தது; கவர்ச்சியான வரிவடிவம் கொண்டது; எத்தியோப்பியாவின் தேசிய மொழி இதுவே.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களால் விரைந்த வளர்ச்சிகள் உலகெங்கும் ஏற்பட்டுவிட்டன. யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற பழந்தமிழர் கனவு நனவாகி வருகிறது. வெளிநாடுகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு வரும் எத்தியோப்பியா அம்ஹாரிக் மொழியை மட்டும் வைத்துக்கொண்டால் காப்டிக் கிறித்தவர் காலத்துக்குப் போய்விட வேண்டிவரும். ஆகையால் 1941 முதல் ஆங்கில மொழி இங்கு கட்டாயமாகக் கற்பிக்கப்படுறது. அரசாங்க, கல்வி நிலையங்களிலும் வணிக நிறுவனங்களிலும் அம்ஹாரிக் போன்றே ஆங்கிலமும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. செங்கோல் ஓச்சும் அரசர் முதல் செத்தை பெருக்கும் எளியவர்வரை அங்கிங்கெனாதபடி ஆங்கில மொழி அனைவர் நாவிலும் களிநடம் புரிகிறது. ஆங்கில மொழியில் நாள் இதழ்களும் பிரெஞ்சு, அரபிக் முதலிய மொழிகளில் திங்கள் தாள்களும் வெளிவருகின்றன.

**உடை**

ஓரளவு வண்ணம் நிறைந்த உடைகளை எத்தியோப்பியர் உடுத்துகின்றனர். காப்டிக் கிறித்தவர் சமயச் சடங்குகளின்போது, சில பகுதிகளில் கரைவைத்த

உடுப்புக்களை உடுத்தித் தலையில் ஒருவகைக் குல்லா வைத்துக்கொள்கின்றனர். ஆடவர் பெண்டிர் இரு பாலருமே ஷாமா உடை உடுப்பது மரபு. இது வட இந்தியாவில் ராஜஸ்தான் உழவர் உடுத்தும் நீண்ட வெள்ளை அங்கியுடன் வண்ணக் கரைகள் கலந்த உடையை ஓரளவு ஒத்தது; கல்விப் பெருக்கத்தாலும் வெளிநாட்டுத் தொடர்பாலும் மேலைநாட்டு உடை வகைகள் பரவி வருகின்றன.

## உணவு

எத்தியோப்பியாவில் உணவுப் பற்றுக்குறை இல்லை. மத்திய கிழக்கு நாடுகளுக்கும் சரி ஆப்பிரிக்க நாடுகளுக்கும் சரி, இதுவே உணவுக் களஞ்சியமாக இருக்கிறது. எல்லா வகையான உணவுப் பொருள்களும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

மிளகு கலந்த இறைச்சியையும் உள்நாட்டுச் சாராயத்தையும் ஆட்டுப் பாலையும் எத்தியோப்பியர் நிறைய உட்கொள்ளுகின்றனர். அவர்கள் காப்பி குடிக்கிறார்கள் என்பது, சொல்லாமலேயே தெரியும்; காப்பி பயிரிடுவதைக் கண்டுபிடித்த நாடு இதுதான். எத்தியோப்பியக் காப்பிக்கு ஒப்பும் உவமையும் இல்லை; அமெரிக்கர் விரும்பிக் குடிப்பது எத்தியோப்பியக் காப்பிதான். அதற்காக அவர்கள் எத்தியோப்பியாவிலிருந்து வரவழைக்கும் காப்பிக்கொட்டையின் அளவு ஐந்து கோடிக் கிலோ.

காப்பித்தூளைப் பாலில் கலந்து சாப்பிடுவது தவிர, காப்பிக்கொட்டையை மென்று தின்னும் பழக்கமும் எத்தியோப்பியரிடம் இருந்து வருகிறது; சில சமயம் காப்பித்தூளை வெண்ணெய்யுடன் பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டி, இரயிலிலோ பஸ்ஸிலோ

பிரயாணம் செய்யும்போது ரொட்டி, மிட்டாய் போன்று உண்பர்.

### பழக்க வழக்கங்கள்

பல துறைகளில், இவர்கள் பிற ஆப்பிரிக்க மக்களி லிருந்தும் வேறுபட்டிருக்கின்றனர். ''பர்தா'' முறை இங்கு நிலவவில்லை; பிறந்த மேனியராக மக்கள் காட்சி தரும் நிலையும் இங்கே கிடையாது. ஏராளமான வண் ணங்கள் கொண்ட உடைகளை உடுத்துவதும், தலைச் சுமையாக எதையும் தூக்குவதும் இந்த நாட்டில் இல்லை.

விவசாயம்தான் இந்த நாட்டின் தலையாய தொழில்; இக்காரணத்தால் பிறநாட்டு உழவர்போல் இங்குள்ள மக்களிடமும் எளிமையும் இனிமையும் கலந்த இயல்புகள் காணப்படுகின்றன. அதோடு ஏழ்மையும் மலிந்து கிடக்கிறது.

காலில் ஏதாவது அணிந்துகொள்ளக்கூட இயலாத அளவு மக்கள் ஏழையாக உள்ளனர்; மழையும் வளமும் இருந்தும் பசியும் பட்டினியும் நீங்கவில்லை. இதனால் உழைப்பில் நம்பிக்கை குறைந்து வருகிறது.

குடியானவர்கள் பெரும்பாலும் துகுல் எனப்படும் குடிசைகளில் வாழ்ந்து தங்கள் கால்நடைச் செல்வங் களைப் பேணுவதிலேயே காலங் கழிக்கின்றனர்; சிங்கம் முதலிய கொடிய விலங்குகளினின்றும் தப்பிக் காத்துக் கொள்ள, கூர்மையான கருவிகளையும் கம்புகளையும் இவர்கள் வைத்திருக்கின்றனர்.

வாகனங்கள் ஒரு தலைமுறைக்குள் வந்தவையே. எத்தியோப்பியர் எத்துணைத் தொலைவும் நடந்து செல்லு வதற்கு அஞ்சுவதில்லை; ஒட்டப்பந்தயத்தில் ஒலிம்பிக் பரிசுகளை எத்தியோப்பியர் பெற்றுள்ளனர். கூடைப்

பந்தாட்டம், கால்லால் உதைத்து ஆடும் பந்து விளையாட்டு முதலிய ஆட்டங்கள் எத்தியோப்பிய இளைஞரிடம் பரவி வருகின்றன.

எத்தியோப்பிய ஆடவர் சிலரின் பெயர்கள் வருமாறு:—அஷுயி டெஸ்ஸம்மா, குர்ட் வின்சி, அப்பே பே ரட்டா, எண்டல் காச்சு மக்கோண்ணன், பிர்ஹனேவ் டிங்கே, பிக்கிலா அபபே.

பெண்களின் பெயர்களாவன:—மிலியன் அபி டிஸ்ஸா, அல்மாஸ் பெஷா, எஷிம்பெட் மெஹ்ரடு, எஷிடாஃ பெசே, வுபட் டெஸ்பானமக்கேல்.

திங்கள் 13

தமிழ் ஆண்டு முறைப்படி, ஓராண்டுக்கு 12 மாதங்கள் தான் உண்டு. இன்னும் பிற ஆண்டுக் கணக்குகளிலும் இதுவே நடைமுறை. ஆனால் எத்தியோப்பிய ஆண்டில் 13 மாதங்கள் உள்ளன.

ஒவ்வொரு மாதத்திலும் 30 நாட்கள் உடைய 12 மாதங்களும், ஐந்து நாட்கள் கொண்ட 13-வது மாதமும் எத்தியோப்பியாவில் உண்டு. 13-வது மாதத்திற்கு, ''கூடுதலான மாதம்'' என்று பெயர். லீப் ஆண்டுகளில் 13-வது மாதத்தில் ஆறு நாட்கள் இருக்கும். இந்த வகையான ஆண்டுக்கணக்கு கிரேக்க நாட்டில் முதலில் பயன்படுத்தப்பட்டு, 16-ம் நூற்றாண்டுவரை ஐரோப்பா வெங்கும் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததாம்.

நாட்டின் அமைப்பு

மலையும் காடும் எத்தியோப்பியா முழுவதும் உள்ளன. மலை என்றால் சுவாமிமலை போன்ற மலைகள் அல்ல; காடுகள் என்பவற்றை, தமிழ்நாட்டில் உள்ள ஒதுக்கப்பட்ட காடுகளை வைத்து மதிப்பதற்கில்லை,

எத்தியோப்பியாவில் சில பகுதிகளில் 13,500 அடி உயரமுள்ள மலைகள் உள்ளன; இவற்றின் ஏற்றத்தையும் எழில் மிகுந்த தோற்றத்தையும் ஒருவாறு உணர வேண்டுமெனின், அட்டிஸ் அபாபாவிலிருந்து அஸ்மரா வுக்குக் காரில் செல்லவேண்டும். திடீரென்று 3250 அடி உயரம் மட்டுமே உள்ள இடங்களுக்கு இறங்கி, கொண்டை ஊசி போன்ற திருப்பங்களில் ஏறி, மேடு பள்ளங்களைச் சமாளிக்கவேண்டும். கிடு கிடு பாதாளங்களில் தவறி விழுந்தால், ஈமச் சடங்கு செய்யக்கூட எலும்பு அகப்படாது.

பிற நாடுகளில் காடுகளில் செடி, கொடி, புதர் என் பனவே இருக்கும். எத்தியோப்பியாவில் நீண்டுயர்ந் துள்ள மரங்கள் எண்ணி முடியாத அளவுக்கு உள்ளன. எனவே, அவற்றில் அந்த நாட்டுக் காட்டிலாக்காவினர் இலக்கம் குறிப்பிடுவதில்லை.

**உயிரினங்கள்**

உலகின் பிற பகுதிகளைவிட ஆப்பிரிக்காவில் சிறப் பாக, கிழக்கு ஆப்பிரிக்காவில், குறிப்பாக எத்தியோப்பி யாவில்—பல்வேறு உயிரினங்கள் பெரிய அளவில் உள்ளன. இவை ஓரளவு அழிக்கப்பட்டுவிட்ட போதிலும், தேசிய வனங்களிலும் பூங்காக்களிலும் பேணப்பட்டு, மிகுதி யாகக் காணப்படுகின்றன. இவற்றைக் காண்பதற்காக வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் வாயிலாக, அரசாங் கத்துக்கு நிறைந்த வருவாயும், எத்தியோப்பிய நாட் டுக்கு விளம்பரமும் கிடைக்கின்றன.

யானைத் தந்தம், உலகிலேயே பெரிய அளவில் எத்தி யோப்பியாவில்தான் கிடைக்கிறது. சிங்கம், காண்டா மிருகம் ஆகியவற்றை வளர்ப்பதற்கான பண்ணைகள் எத்தியோப்பியாவில் இருக்கின்றன. ஒட்டகம், ஒட்டகச்

சிவிங்கி, கலைமான், வரிக் கழுதை, நியாலா என்ற பெயருடைய மலைநாட்டு வரையாடு போன்ற உயிரினங்களைப் பத்தாயிரக் கணக்கில் காண இயலும். 13,000 அடி உயரமுள்ள மலைப்பகுதியில் வாழும் மிருகங்களும், 6000 அடி உயரத்திற்கும் மழை பெய்த வண்ணமாயும் உள்ள காடுகளில் வாழும் மிருகங்களும் எத்தியோப்பியாவில் இருக்கின்றன. சிறுத்தை, குதிரை, நீர் யானை, பூனை, பன்றி ஆகிய ஒவ்வொரு வகையிலும் ஆயிரம் சாதிகள் உண்டு; குரங்குகளுக்கும் குறைவில்லை.

செங்கொண்டை நாரைகளும் எத்தியோப்பியாவில் உள்ளன. இவை வட ஆப்பிரிக்காவில் இன்னும் மிகுதியாக இருக்கின்றன. இந்த நாரைகளுள் பெண் நாரைகள் ஓராண்டுக்கு இரண்டு முட்டைகளே இடுகின்றன; அவற்றை அவை அடை காப்பதும் இல்லை. இந்த நாரைகளின் ஆயுட்காலம் பத்து ஆண்டுகள் தானும். வாழ்நாள் முழுவதுமாக மூன்று முட்டைகளே இடும் நாரைகளும் இருக்கின்றனவாம். முட்டைகள் பழுப்பு நிறமாகவும் அவற்றின் மீதுள்ள புள்ளிகள் கரும்பச்சை வண்ணமாகவும் இருக்கின்றன.

திருவாரூரான் தேர் அறியான், திருச்செந்தூரான் கடல் அறியான். காசிக்குப் போய் கங்கையில் நீராடாதவர் உண்டு. இவ்வாறே, ஆப்பிரிக்காவில் வாழ்ந்தும் காட்டு மிருகச் செல்வங்களைப் பார்க்காத பெரியவர்கள் இருக்கின்றனர். ஆனால் எத்தியோப்பியர்—குறிப்பாக குழந்தைகள்—இதற்கு விதிவிலக்கு.

எத்தியோப்பியக் குழந்தைகள் பள்ளிகளில் எழுதும் கட்டுரை கதைகள் மிருகங்களைப் பற்றியே இருக்கும். சான்று:

## முதலையும் காளைமாடும்

காளை மாட்டுக்குத் தாகம் எடுத்தது. தண்ணீர் குடிக்க ஆற்றுக்குச் சென்றது. ஆழத்துக்குள் போய்விட்டது. ஒரு முதலை, காளை மாட்டின் குதிகாலை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விட்டது. முதலை வலுவான பிராணி; காளைமாடும் வலுவில் குறைந்ததன்று.

காளை மாடு ஆற்றைவிட்டு வெளியே வந்து விடுமா? அல்லது, முதலைக்குப் பலியாகி விடுமா ?

'முதலையாரே, முதலையாரே, நீர் சூரியனைப் பார்த்ததில்லையே' என்று காளை மாடு சொல்லிற்று. உடனே முதலை, காளைமாட்டின் கால் பிடியை விட்டு, சூரியனை எட்டிப் பார்த்தது. உடனே, காளை மாடு ஓட்டம் பிடித்தது!

### வரலாறு

ஆப்பிரிக்காவிலேயே மிகப்பழமையான நாடுகள் எகிப்தும் எத்தியோப்பியாவும்தான். தொடர்ந்து சுதந்தரமாக இருக்கும் நாடு என்ற பெருமை எத்தியோப்பியாவுக்கு மட்டுமே உண்டு. (விதி விலக்கு இத்தாலிய ஆட்சிக்காலம்.)

4300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படும் சவங்கள் பாடம் பண்ணிய நிலையில் எகிப்தைப் போல எத்தியோப்பியாவிலும் காணப்படுகின்றன.

எத்தியோப்பிய மன்னர்கள் ஆக்சம் என்ற நகரிலிருந்து ஆட்சி செலுத்தியதால் அவர்களுக்கு, ஆக்சம் அரசர்கள் என்ற பெயர் நிலவிவந்தது. ஆக்சம் அரசர்கள் கிறித்தவ சமயத்தை ஆதரித்தும் கிறித்தவ நாடுகளுடன் உறவு கொண்டும் வந்தனர்.

இடையே, எத்தியோப்பியரை யூத சமயத்துக்கு மாற்ற துநவாஸ் என்பவன் முயன்று அம் முயற்சியில் பலரைக் கொன்முன். அதற்காக அவனைப் பழிவாங்க, ஆக்சம் அரசர் 23 கப்பல்களில் 12,000 போர் வீரரை அனுப்பிச் செங்கடலுக்கப்பால் ஓரிடத்தில் அவனைத் தோற்கடித்தார். இதன் பிறகு, ஆரும் நூற்ருண்டள வில், பைஜாண்டியப் பேரரசுடன் எத்தியோப்பியா வணிக உறவுகொண்டது. சுற்றிலும் அரபு நாடுகளால் சூழப்பெற்ற போதிலும், எத்தியோப்பியா தன் உரிமையை விட்டுக்கொடுக்கவில்லை.

நபிகள் நாயகம் எத்தியோப்பியாவுக்கு வருகை புரிந்திருக்கிருர் என்றும், எத்தியோப்பியாவுக்கு ஆபத்து நேரும்போது உதவி செய்யவேண்டுமென்று திருக் குரானில் குறிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

பத்தாம் நூற்ருண்டில், எத்தியோப்பியா சீர்குலைந் தது. ஒற்றுமை நீங்கிற்று. அரசகுடும்பத்தின் செல்வாக்குக் குறைந்தது. 50 ஆண்டுகளுக்குப்பின் நிலைமை மாறிற்று. பின்னர் ஆட்சிக்கு வந்த அரசர்கள் கிறித்தவ தேவாலயங் களைப் புதிதாகக் கட்டியும் பழையனவற்றைப் புதுக்கியும் மக்களின் ஆதரவைப் பெற்றனர்.

14-ஆம் நூற்ருண்டுவரை, அராபியருக்கும் எத்தி யோப்பியருக்கும் சின்னஞ் சிறு பூசல்கள் புகைந்து கொண்டே இருந்தன. அந்நூற்ருண்டின் தொடக்கத்தில் வாய்ச்சண்டையும் சிறு போர்களும் முற்றி 300 ஆண்டுக் காலத்திற்குத் தொடர்ச்சியாகப் பெரிய போர்கள் நிகழ்ந்தன. இதன் விளைவாக, எத்தியோப்பியா வலுக் குன்றியது, வோலோ என்ற எத்தியோப்பிய இனத்தவர் இஸ்லாமிய மதத்தை ஏற்று, அதில் அழுத்தமான நம் பிக்கை கொண்டனர். இந்நிகழ்ச்சிகளால், நாட்டின்

பெரும் பகுதியும் முக்கியமான பகுதிகளும் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை.

15,16-ம் நூற்றுண்டுகளிலிருந்து, எத்தியோப்பியாவின், வாணிகத்தில் அராபியர் கூடுதலாகப் பங்கு பெறலாயினர். இதையொட்டி அடிமைகளாக எத்தியோப்பியரை வெளிநாடுகளுக்கு விற்கும் பழக்கமும் தொடங்கிற்று.

இதே காலத்தில் போர்த்துக்கல் நாட்டினரும் எத்தியோப்பியாவில் வாணிகம் பெருக்கி அரசவையில் செல்வாக்குப் பெற்றனர். இந்நிலை ஆறு ஆண்டுகளில் அடியோடு மாறிவிட்டதை, முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம்.

1667 இல் யோகனேஸ் தி ஜஸ்ட் என்ற அரசர் பட்டத்துக்கு வந்தார். அவர், முஸ்லிம்களுக்கும், இந்தியா பாரசீகம் ஆர்மினியா ஆகிய நாட்டினர்க்கும் பல கட்டுப்பாடுகளை விதித்தார். அவருக்குப் பின் அரசரான முதலாம் இயேசு சமூக-பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கு அடிகோலினர்.

18—19 ஆம் நூற்றுண்டுகளில் எத்தியோப்பியாவில் உள்நாட்டுப் போர் நிகழ்ந்தது. அதேசமயம் ஆப்பிரிக்கா முழுவதும் ஐரோப்பிய நாடுகளுக்கு அடிமைப்பட்டது. இந்தியப் பெருங்கடல் ஆங்கிலேயர் வயப்பட்டது. இதனுல் எத்தியோப்பியாவின் வாணிகம் அனைத்தும் ஆங்கிலேயர் ஆட்டிப்படைக்கும் நிலைக்கு வந்தன.

1855-இல் எத்தியோப்பிய அரசரான காசா தியோடோர், பிரிட்டிஷ் கான்சலால் கைதுசெய்யப்பட்டார். நேப்பியர் என்ற தளபதி தலைமையில் பிரிட்டிஷ் படை படையெடுத்தது. அரசர் காசா தியோடர், தாமே தம் உயிரை மாய்த்துக்கொண்டார்.

1869—இல் ஓர் இத்தாலிய வணிகக் குழு, அஸ்ஸாப் துறைமுகத்தை விலைக்கு வாங்கிற்று. 1885-இல் மஸ்ஸாவா துறைமுகத்தை இத்தாலியர் கைப்பற்றிக் கொண்டனர். இவ்வாறு எரிட்ரியா இத்தாலிய ஆட்சிக் குட்பட்டது. 1896-இல் அடோவா என்ற இடத்தில் நடைபெற்ற போரில் எத்தியோப்பியா வெற்றி யடைந்த போதிலும், எரிட்ரியா இத்தாலியப் பேரரசின் ஒரு பகுதியாகவே தொடர்ந்து இருந்து வந்தது. இதன் விளைவு, நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும் என்பது போல, எத்தியோப்பியாவை விழுங்கிவிட இத்தாலி ஆசைப்பட்டது. அந்த ஆசை 1935-இல் நிறைவேறிற்று.

இதற்கிடையே, எத்தியோப்பியாவில் மெனலக் என்ற அரசர் சாலைகளும் இரயில்பாதைகளும் அமைத்து நாட்டு வளர்ச்சிக்கான பலசெயல்களை மேற்கொண்டார். அட்டிஸ் அபாபாவை, தலைநகராமாக்கினார்.

1930-ல் ஹெய்லி செலாசி, எத்தியோப்பியாவின் அரசர்—பேரரசர் என்பதே பட்டப் பெயர்—ஆனால் இவர் வரலாறே, எத்தியோப்பியாவின் வரலாறு எனின், அது முற்றிலும் மெய்யே.

## ஹெய்லி செலாசி

பல நாடுகளில் முடியாட்சி நிலவுகிறது. ஆனால், எத்தியோப்பியாவில் இருந்துவரும் முடியாட்சி, விதிவிலக் கானது. இன்றைய பேரரசர், ஹெய்லி செலாசி, அந் நாட்டின் ஆட்சித் தலைவராக 35 ஆண்டுகளாக இருந்து வருபவர்; பழுத்த அறிஞர், திறமை மிக்கவர்; தம் குடி களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்; வீரர்; இத்தாலி யரை எதிர்த்துப் போர்புரிந்து உலகப் புகழைப் பெற் றவர்;தம் நாடு இழந்த சுதந்தரத்தை மீட்டவர். எனவே

இவர், அரியாசனத்தின்மீது அலங்காரமாகக் கொலு வீற்றிருக்கவில்லை. அவர் நா அசைத்தால்தான், இந்த நாடே அசைகிறது. ஹெய்லி செலாசி இன்றி, எத்தியோப்பியாவில் ஓரணுவும் மாருது.

இவர், இந்த நாட்டின் 255-வது பேரரசர். இவருடைய முழுப்பட்டப் பெயர் வருமாறு: எதியோப்பியாவின் பேரரசரும், அரசர்க்கு அரசரும், ஜீயன் மன்னரும், ஜூடாவைப் புறங்கண்ட அரிமாவும், அரசாங்கத் தலைவரும் ஆகிய மாட்சிமை தங்கிய முதலாம் ஹெய்லி செலாசி.

இவரிடம் எத்தியோப்பிய மக்கள் கொண்டுள்ள பற்று, அளவு கடந்தது. அனைவரும், பெருமதிப்பு வைத்திருக்கின்றனர். வேலைக்காரர்கள், தவழ்ந்துதான் செல்லுகின்றனர். தரையில் விழுந்து கும்பிடுபவர்களும் உள்ளனர். ஆதீனத் தலைவர்களிடம் அவர் தம் சீடர்கள் நடந்துகொள்ளுவதுபோல, ஹெய்லிசெலாசியைக் காண்பார், அவையடக்கமாக மும்முறை வணங்கி வழிபடுவதும் விடைபெறும்போது அரசர்க்குத் தம் முதுகு காட்டாமல் பின்னேக்கி நடந்துசெல்லுவதும் வழக்கமாக இருந்துவருகிறது.

1934 டிசம்பர் 6-ம் நாள், அன்றுதான், இத்தாலிக்கும் எத்தியோப்பியாவுக்கும் போர் மூண்டது. இத்தாலிய சோமாலிலந்து எல்லையிலிருந்து 100 கி, மீ. தொலைவில், தென் கிழக்கு எத்தியோப்பியாவிலுள்ள வால்வால் என்னுமிடம் இத்தாலிய விமானங்களாலும் போர் வீரர்களாலும் தாக்கப்பட்டது. சீனர் 1962-இல் இந்தியாவைத் தாக்க முன்னேற்பாடு செய்ததுபோலவே, இத்தாலியரும் முன்கூட்டியே நயவஞ்சகமாக விமான நிலையங்கள் நிறுவிக்கொண்டனர்.



ஹெய்லி செலாசி

தமக்கு நாடு பிடிக்கும் ஆசையில்லை என்றும், இத்தாலியின் மேலாதிக்கத்தை எத்தியோப்பியா ஏற்ருல், போரை நிறுத்துவதாகவும் இத்தாலியச் சர்வாதிகாரி முசோலினி முழங்கினுர். இதைத் தொடர்ந்து பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் இத்தாலியருடன் சமரசப் பேச்சுத் தொடங்கினர். சர்வதேசச் சங்கத்திலும் பேச்சுவார்த்தைகள் நடந்த வண்ணமாக இருந்தன.

பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டே இருந்தன. உள்ளத்தில் சூதும் உதட்டில் புன்சிரிப்பும் கொண்ட முசோலினி பிரிட்டிஷ்பிரெஞ்சு ஆளுகைக்குட்பட்ட சூயஸ் கால்வாய் வழியாக, ஆயிரக்கணக்கான போர்வீரர்களையும், வாகனங்களையும், டாங்கிகளையும், போர்க் கருவிகள் நிறைந்த லாரிகளையும் எத்தியோப்பியாவுக்கு அனுப்பிவிட்டார். இதன் பிறகே, எத்தியோப்பியர் எதிர்த்துப் போரிட முடிவு செய்தனர். 1935–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், அவர்கள் ஆள் ஒன்று, ஆயுதம் ஒன்று ஆயினர். ஆனுல் அவர்களிடம் கூரிய கருவிகளோ புதிய ஆயுதங்களோ இல்லை. போதிய அளவு பயிற்சி பெற்ருேரும் குறைவு.

போர்க் களத்துக்கு அருகே, தாமே தலைமை தாங்கி ஹெய்லி செலாசி எத்தியோப்பிய மக்களுக்கு வீரத் தலைமை பூண்டார். வெறும் வீரம் போதுமா? பிற நாடுகளின் ஆதரவும் தேவைப்பட்டது. 52 நாடுகள் எத்தியோப்பியாவுக்கு அநுதாபம் தெரிவித்தன. அநுதாபம் தெரிவித்தவர்கள் எல்லோரும், நல்லெண்ணம் உள்ளவர்களாக இருந்த போதிலும், உதவி அனுப்பக் கூடிய ஆற்றலும், அதை உடனே விரைந்து செய்யக் கூடிய வசதியும் பல நாடுகளுக்குக் கிடையாது. இந்த நிலையில் எத்தியோப்பியா சரணடைய நேர்ந்தது.

ஹெய்லி செலாசி, இத்தாலியருடன் ஒத்துழைத்தால் அவரை மரியாதையாக நடத்துவதாக, முசோலினி அறிவித்தார். இந்த வலையில், ஹெய்லி செலாசி விழுக வில்லை. அவர் பழமும் தின்று, கொட்டையும் போட்ட அநுபவசாலி.

தம் நாட்டிலிருந்து தப்பி, ஹெய்லி செலாசி, இயேசு மதம் தோன்றிய பகுதிகளுக்குச் சென்று வழிபட்டு, ஜெனீவாவை அடைந்து சர்வதேசச் சங்கத்தினரிடம் தம் நாட்டிற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை, கேட்பார் உள்ளம் உருகும் வகையில் வரிசையாகவும் விளக்கமாக வும், சீராகவும் சிறப்பாகவும் எடுத்துரைத்தார். அவரைக் கண்டவர்களும் அவர் உரையைச் செவிமடுத்தவர்களும், சர்வாதிகாரச் சக்திகளினால் சின்னஞ்சிறு நாடுகளுக்குத் திடீரென்று நேரக்கூடிய தீமைகளை உணர்ந்து மனம் கொதித்தனர்.

1936 மே 9-ஆம் நாள், எத்தியோப்பியா, இத்தாலியப் பேரரசின் ஒரு பகுதியாகிவிட்டதாக அறிவிக்கப் பட்டது. இத்தாலிய அரசருக்கு, எத்தியோப்பியாவின் பேரரசர் என்ற பட்டமும் சூட்டப்பட்டது. இத்தாலியத் தளபதி ஒருவர், அந்தப் பேரரசரின் பிரதிநிதியாக—எத்தியோப்பியாவின் வைஸ்ராயாக--நியமிக்கப்பெற்றார்.

ஹெய்லி செலாசி பிரிட்டனில் (இவ்வாறே தலாய் லாமா 1961 இல் இந்தியாவில்) தஞ்சமடைந்தார். உறவினர்களும் ஆலோசகர்களும் உடன் சென்றனர். பெயரளவுக்கு ஒரு அரசாங்கம் இங்கிலாந்திலிருந்து செயல் பட்டது. வெளிநாடுகளிலுள்ள எத்தியோப்பியர்களை ஒன்று திரட்டவும், உலக நாடுகளின் ஆதரவைப் பெறவும், இத்தாலியரை எத்தியோப்பியாவிலிருந்து விரட்டவும் இந்த அரசாங்கம் முயன்றது.

1939 செப்டம்பரில் ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் போர் ஏற்பட்டது. இயல்பாகவே, ஜெர்மனியுடன் நல்லுறவு கொண்டிருந்த இத்தாலிக்கு, பிரிட்டன்மீது பகை இருந்தது. ஹெய்லி செலாசிக்குத் தஞ்சமும் அவரது அரசாங்கம் செயல்பட வசதியும் கொடுத்ததால், பிரிட்டன்மீது இத்தாலியின் பகை பெருகிற்று. 1940 சூன் மாதம் பிரிட்டன்மீது இத்தாலி போர் தொடுத்தது. எத்தியோப்பியாவில் இருந்து, இத்தாலியப்படை (பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட) சோமாலிலந்தையும் சூடானையும் படையெடுத்தது.

அந்தப் படையெடுப்பு ஏற்பட்டு 30 நாட்களில், ஹெய்லி செலாசி பிரிட்டனைவிட்டுப் புறப்பட்டார். அவர் எதிர்பார்த்த வாய்ப்புக் கிடைத்துவிட்டது. நம் இந்திய மக்களின் நன்மதிப்புக்குரிய நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் 1943-இல் கடல் கடந்த இந்தியரைக் கொண்டு இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கியது போல, ஹெய்லி செலாசி பிரிட்டிஷாரின் ஆதரவுடன் பாலஸ்தீன் முதலிய நாடுகளிலிருந்து எத்தியோப்பிய அகதிகளைக் கொண்டு ஒரு படை திரட்டினார். கார்ட்டூம் நகரில் வந்து இறங்கினார். பிரிட்டிஷ் படையும் எத்தியோப்பியப் படையும் கைகோத்து, இத்தாலியரை முறியடிக்கும் மாபெரும் போரில் முனைந்தன.

இந்த நிகழ்ச்சிகளால் வேதனைப்பட்ட இத்தாலியர், பதினாயிரக்கணக்கில் எத்தியோப்பியரைச் சுட்டுத் தள்ளினர். பலவாறு, பொதுமக்களைக் கொடுமைப் படுத்தினர். பெண்கள், சமயக் குருமார் ஆகியோர் பல்லாயிரவரின் உயிர்களும் அவர்களுடைய கொடுங்கோலுக்கு இரையாயின.

சூடானிலிருந்து ஹெய்லி செலாசி, தம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். பொறுத்திருக்கும்படியும்,

சில மாதங்களில் எத்தியோப்பியாவிலிருந்து இத்தாலியர் விரட்டப்படுவர் என்றும், அவர்களைப் பழிக்குப் பழி வாங்கவேண்டாமென்றும் அவ்வேண்டுகோளில் குறிப் பிடப்பட்டிருந்தது.

திட்டமிட்டபடியே, சில மாதங்களில் இத்தாலியர் வெளியேற்றப்பட்டனர். பிரிட்டிஷ் இராணுவத்தின் மேற்பார்வையில், ஹெய்லி செலாசி மீண்டும் தம் நாட்டின் தலைவர் ஆனார். 1954 வரை, பிரிட்டிஷ் இராணுவத்தின் ஆட்சி நடைபெற்றது.

பிரிட்டன், அமெரிக்கா ஆகிய பல நாடுகளின் உதவி யால் ஹெய்லி செலாசி எத்தியோப்பியாவுக்கு ஏற்பட்ட சேதங்களினின்றும் காத்து, தம் நாட்டை நல்ல நிலைமைக் குக் கொண்டுவரப் பாடுபட்டார். இதன் விளைவுகள் பல. பார்க்கிளேஸ் வங்கி என்ற அமெரிக்க வங்கி, எத்தியோப் பியப் பொருளாதாரத்தின் அச்சாணியாயிற்று. எத்தி யோப்பிய நாணயம் அமெரிக்க டாலருடன் இணைந்தது. படைகள், பிரிட்டிஷ் முப்படைகளின் அமைப்பைப் பின் பற்றித் திருத்தியமைக்கப்பட்டன. பிரிட்டனில் வாழ்ந்த தாலும் வெளிநாட்டுத் தொடர்பு மிகுதியாலும், ஆங்கில மொழியின் அருமையை உணர்ந்த ஹெய்லி செலாசி. நாடெங்கும் அதைக் கட்டாயமாகப் பயில ஆணை பிறப் பித்தார்.

## தொழில்

வேளாண்மைதான் இந்நாட்டின் பெரிய தொழில். மக்களில் முக்கால்வாசிப்பேரை வாழ வைப்பது இத் தொழிலேயாகும். இத் தொழிலில் இந்நாளைய ஆராய்ச் சிக்கேற்ப, இன்னுஞ் சிறப்பாக நடைபெற வழி இருக்கிறது.

நல்ல முறையில் இயங்கும் விவசாயப் பண்ணைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அத்தி பூத்ததுபோலக் காணப்படுகின்றன.

காப்பித் தோட்டங்கள் மட்டும் காலத்துக்கேற்ற மாறுதல்களைக் கையாண்டு, தொழில் அமைப்பிலும் உற்பத்தி முறையிலும் சிறந்து விளங்குகின்றன.

கால்நடைகளின் தொகை இரண்டுகோடி. மக்கள் தொகையும் கால்நடைகளின் தொகையும் ஏறத்தாழச் சமமாக இருப்பது சிந்தனைக்குரியது. மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள வெள்ளாட்டுத்தோல் ஆண்டுதோறும் ஏற்றுமதி ஆகிறது. அமெரிக்கர்கள், எத்தியோப்பியாவிலிருந்து வரும் இந்தத் தோலில் செய்யப் பெற்ற கையுறைகள் (கிளவ்ஸ்) அணிந்துகொள்கின்றனர். பல்வேறு தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் ஏனைய தோல் வகைகளும் எத்தியோப்பியாவில் விற்பனை செய்யப் படுகின்றன.

வேளாண்மைப் பொருள்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், காப்பிக் கொட்டை ஆகியவை குறிப்பிடத்தக்க ஏற்றுமதிப் பொருள்கள்.

புவியியல் வளம் மிகக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். பெரில்லியம் பெரிய அளவில் இருப்பதாகக் கூறப்படுகிறது. 1963 முதல், தங்கம் ஓரளவு தோண்டப்பட்டு வருகிறது. பொட்டாஷ் உப்புக் காய்ச்சும் துறையில், அமெரிக்க வணிகக் குழு ஒன்று, எத்தியோப்பியாவில் பெருமுன்னேற்றம் கண்டிருக்கிறது.

தொழில் வளர்ச்சி தொடங்கியிருக்கிறது. இதற்கேற்ப, வேளாண்மைத் துறையில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. நூலாலைகள் தோன்றியிருப்பதால் பருத்தியும்

சர்க்கரை ஆலைகள் அமைந்திருப்பதால் கரும்பும் பயிரிடப் படுகின்றன.

போக்குவரத்து, மின்சார உற்பத்தி, தனியார் மூல தனம் போட முன்வராத பெரிய தொழில்கள் ஆகிய துறை களில் மட்டுமே எத்தியோப்பிய அரசாங்கம் ஈடுபடுகிறது. தொழில்துறையில் போடப்பட்டிருக்கும் பணத்தில் 100க்கு 70 பங்கு வெளிநாட்டினரைச் சேர்ந்தது. பெரும் பாலும் சர்க்கரை ஆலைகள், பொட்டாஷ் உப்பு உற்பத்தி, இறைச்சியைப் பக்குவப்படுத்துவது, பொறியியல் தொழில்கள் ஆகியவற்றில் அமெரிக்கர் முதல் போட் டிருக்கின்றனர். பெட்ரோல் தோண்டும் முயற்சியை மூன்று வெளிநாட்டு வணிக அமைப்புக்கள் செய்து வருகின்றன. இவற்றுள் ரஷ்ய அரசாங்கத்து வணிகக் குழுவும் ஒன்றாகும். யூகோசுலவியா, செக்கோசுலவகியா, கிழக்கு ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளும் தொழில் கள் தொடங்க எத்தியோப்பியாவுடன் ஒத்துழைத்து வருகின்றன. இந்திய உதவியுடன் இயங்கும் தொழில், பிர்லா நிறுவியுள்ள நூல்—நெசவு ஆலை மட்டுமே ஆகும்.

வெளிநாட்டினர் சுற்றுலா வருவதன் காரணமாக, எத்தியோப்பியாவுக்கு ஓரளவு வருவாய் கிடைக்கிறது.

எத்தியோப்பிய அரசாங்கத்தின் மொத்த வரவு செலவு ஓராண்டுக்கு 50 கோடி ரூபாய்தான். வளம் கொழிக்கும் வருங்காலத்தின் விடிவெள்ளியே இன்னும் உருவாகவில்லை.

### போக்குவரத்து

மலைகளும் பாலைவனங்களும் மிகுந்ததால், பல நூற் றாண்டுகளாக எத்தியோப்பிய மக்கள் தாங்கள் வாழும் சிற்றூர்களும் அவற்றைச் சுற்றிய சிறு வட்டங்களும்

தவிர வேறு எங்கும் செல்லாதிருந்தனர். இந்த நூற்ருண்டில்தான் போக்குவரத்து வசதிகள் பெருகியுள்ளன.

சாலைகள், இரயில் பாதைகள், துறைமுக வளர்ச்சி யாவுமே அண்மை நிகழ்ச்சிகளே. வெளி நாடுகளில் வாழ்ந்தும் போரில் அநுபவப்பட்டும் ஹெய்லி செலாசி, ஆகாயவிமானப் போக்குவரவின் இன்றியமையாமையை அறிந்துகொண்டார். வெளிநாடுகள் பலவற்றிற்கு எத்தியோப்பிய விமானங்கள் செல்லுகின்றன. உள்நாட்டிலும் இவை பெரிய அளவில் இயங்க வசதியாக, பல விமான நிலையங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அமெரிக்க உதவியுடன் உருவாகியுள்ள அட்டிஸ் அபாபா விமான நிலையம் ஜெட் விமானங்கள் இறங்குவதற்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது. அமெரிக்கர் கட்டியுள்ள மற்ெருரு விமான நிலையம், காப்பித் தோட்டப் பகுதியில் உளது.

### கல்வி

கல்வித்துறையில் எத்தியோப்பியா மிகப் பெரிய அளவில் வளர்ச்சியடையாவிடினும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குரிய அடிப்படை வேலைகளைத் தொடங்கியிருக்கிறது. ஹெய்லி செலாசி மன்னர், எத்தியோப்பியாவின் கல்வி அமைச்சராகவும் இருந்து வருகிருர்.

போதிய பணம் இன்மையால், ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இதை ஈடு செய்ய, வெளிநாடுகள் தம் செலவில் அனுப்பும் ஆசிரியர்களை எத்தியோப்பிய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது.

வேளாண்மைக் கல்லூரி நிறுவவும் பல்கலைக் கழகம் தொடங்கவும் அமெரிக்கா பத்துக் கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது.

## கலை

அரசர்களுடைய வழி வழி ஆதரவில், எத்தியோப்பியாவில் பல கலைகள் பேணப்பட்டு வந்திருக்கின்றன. கட்டிடக்கலை, இசை, நடனம், மர வேலைப்பாடு, கயிற்றுக்கூடை பின்னுதல் போன்றவை குறிப்பிடத்தக்கன. வெள்ளி, தங்கம் ஆகியவற்றில் தம் திறமையைக் காட்டும் பத்தர்களும் மிகுதியானவர் இருக்கின்றனர். திரியா மூங்கிலா என்று தெரியாதவாறு, விக்கர் வர்க் என்னும் பொருளில் வேலை செய்பவர்களும் உள்ளனர்.


வரலாற்றுப் புகழ்மிக்க சாலமன் அரசர்–ஷீபா அரிசி சந்திப்பை நினைவூட்டும் சித்திரங்களைத் தீட்டுபவர்களுக்கும் குறைவில்லை. தென்னை ஓலைக் குறுத்து வழங்கி கிறித்தவர்கள் ஞான ஸ்நானம் பெறுவதைப் புதுப்பித்துக்கொள்ளும் காட்சியை வண்ணத்தில் தீட்டும் ஓவியர் பலர் ஆவர்.

கலைவண்ணம் நிறைந்த கப்பல்களைக் காகிதத்தில் செய்து, தானு ஏரியில் மிதக்க விடும் பழக்கமும் எத்தியோப்பியாவில் உண்டு. இது, வங்காளிகள் கொண்டாடும் பூஜா (நவராத்திரி) விழாவைப் போன்றது.

நடராசர் திருவுருவம் செய்வதில் பின்பற்றப்படுவது போன்ற அரக்கு வார்ப்பு வேலைமுறைகளைக் கடைப்பிடிக்கும் கலைஞர்களும் எத்தியோப்பியாவில் இருக்கின்றனர். அஜந்தா, சித்தன்னவாயில் ஆகிய கலைக்கூடங்களை நினைவூட்டும் கருவூலங்களும் அந்த நாட்டில் உண்டு. அரசர்களின் சமாதிகளுக்கு அருகே, அசோகர் நிறுவியதைப்போன்ற 70 அடி உயரமுள்ள கற்றூண்கள் நடப்பட்டிருக்கின்றன.

மாமல்லபுரத்தில் இருப்பதுபோல, ஒரே கல்லில் குடையப்பெற்ற இறையுருவங்கள் எத்தியோப்பியாவில்

உள்ளன. இக்குடைவரைக் கோயில்கள், கிறித்தவ தேவாலயங்கள் என்பது மட்டுமே மாமல்லபுரத்தி னின்றும் இவற்றை வேறுபடுத்துகின்றது. இச் சிறப்புக்




மேரியம்மை தேவாலயம்

குரிய ஊர் லலிபேலா. லலிபேலா, எத்தியோப்பியாவின் மாமல்லபுரம்.

எத்தியோப்பியாவின் மாமல்லபுரம், மேற்குத் தொடர்ச்சி மலை போன்ற ஒரு மலைப்பகுதியில், மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் அமைந்திருக்கிறது. தேவாலயங்கள் தொகுப்புக்களாக உள்ளன. அவற்றின் உட்பகுதியில் பழங்காலத்துக் கல்வெட்டுக்கள் பொறிக் கப் பட்டுள. அவை கிரேக்கம், அரபு, சபேயன், கீ ஜிஸ் என்ற நான்கு மொழிகளிலும் இருப்பதால், பழங்

காலத்து எத்தியோப்பியாவில் தனி ஒரு மொழிக்கு ஏற்றம் கொடுக்க வேண்டும் என்ற வெறிபிடித்த மனப் பான்மை நிலவவில்லை என்பது தெள்ளத் தெளியத் தெரிகிறது.



பயிட்டி மரியாம் என்பது, மேரிஅம்மை தேவாலயம்; இப் புனிதத்தலத்து மேற்குவாயிலாக உள்ள கற் கோட்டை, அங்கேயுள்ள மணி, கல் சாரளம் ஆகியவை அந்நாளைய எத்தியோப்பியரின் கலைக்குச் சான்று பகர் கின்றன.

கிறித்து பெருமான் இயற்கை எய்திய நிலையும் அருகே காவல் தெய்வம் வீற்றிருக்கும் கோலமும் கல்லில் வடிக்கப்பெற்றிருக்கின்றன. சில தேவாலயங்களின் வாயி லில், பொதுமக்கள் கூடித் தங்கள் ஆட்சியை நடத்து

வதற்கு வழி செய்த அம்பலக் கற்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட கட்டிடக் கலை இலக்கணப்படி அமைந்த பல வகையான தேவாலயங்கள் லலிபேலாவில் இருக்கின்றன.

மாமல்லன் என்பது போல, லலிபேலா என்பதும் ஓர் அரசனின் பெயர். அரசர் ஆதரவும் சமய உணர்வும் சேர்ந்து உருவான நகரங்கள் மாமல்லபுரமும் லலிபேலாவும் என்று தங்குதடையின்றிச் சொல்லலாம்.

குறிப்பிடத்தக்க மற்றொரு நகரம் ஆக்சம். இது, முன்னைய தலைநகர்களுள் ஒன்று. இங்கே மூன்றும் நூற்றாண்டில் அரசாண்ட ஒருவரின் திருவுருவமும், ஏராளமான நீண்டுயர்ந்த தூண்களும் காணத்தக்கன.

கோண்டார் நகரமும் வரலாற்றுச் சிறப்புடையது. 16-ஆம் நூற்றாண்டில் எத்தியோப்பியாவை ஆண்ட பாசில்தாஸ் பேரரசரின் கவினுறு அரண்மனைகள், அன்றைய நிலையில் பேணப்பட்டு வருகின்றன. இதனால், இந்நகருக்கு உலா வருவோர் எண்ணிலர்.

## இந்தியாவும் எத்தியோப்பியாவும்

இவ்விரு நாடுகளுக்கும் உள்ள உறவு மிகுதி. இது, நெடுங்காலத் தொடர்பும் ஆகும். கப்பல் போக்குவரத்து தொடக்க காலத்தில் இருந்தபோது, இந்தியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடைப்பட்ட கடலில் 6 மாதம் காற்றும் 6 மாதம் எதிர்காற்றுமாக இருந்த நிலையைச் சமாளிக்க, ஒரு நாட்டிலிருந்து வரும் கப்பல்கள் 6 மாத காலத்திற்கு அங்கேயே தங்கிவிடும் வழக்கம் நிலவிவந்தது. இதனால், மிளகு, ஏலக்காய், துணி முதலிய பொருள்களை ஏற்றிச்சென்ற இந்திய வணிகரும் கப்பலோட்டிகளும் மாதக்கணக்கில் எத்தியோப்பியாவி

லேயே இருக்க நேரிட்டது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாறு வாணிகம் செய்த இந்தியர்கள் யானைத் தந்தம், சிறுத்தைத்தோல், தங்கம் ஆகிய பொருள் களையும் அடிமைகளையும் எத்தியோப்பியாவிலிருந்து இந்தியாவுக்கும் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வந்தனர்.

ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இரு நாடு களுக்கும் தொடர்புகள் இருந்தன என்று கருதுபவர் களும் உள்ளனர்.

எத்தியோப்பியா என்ற பெயரே, இந்தியாவிலிருந்து போய்க் குடியேறிய யாதவ இனத்தவரைக் குறிப்பது என்றும் சொல்லப்படுகிறது..

அரசாங்கச் சின்னமாக இந்தியாவில் மூன்று சிங்கங் களின் படமும் எத்தியோப்பியா வில் ஜுடா சிங்கத்தின் படமும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆமத்நகர் முதலிய (மேற்கு இந்தியாவில் உள்ள) முஸ்லிம் சிற்றரசர் சமஸ்தானங்களில் எத்தியோப்பியர் அடிமைகளாக வந்து ஒரு தனி இனமாக சிலகாலம் விளங்கி இப்போது ஏனையோருடன் இரண்டறக் கலந்துவிட்டனர். பாமினி அரசர்களின் ஆட்சியிலும் ஔரங்கசீப்பின் ஆட்சியிலும் தனிப்பட்ட எத்தியோப் பியர் சிலர் பெரிய அளவில் செல்வாக்குப் பெற்றிருந் தனர்.

போர்த்துகல் நாட்டினர் கத்தோலிக்க சமயத்தை எத்தியோப்பியாவில் பரப்ப விரும்பியபோது, கோவாவி லிருந்த பாதிரிமார்களையே அந்தப் பணிக்கு அனுப்பினர்.

1868-இல் பிரிட்டிஷார் எத்தியோப்பியாவுக்குப் படை அனுப்ப முடிவு செய்தபோது, இந்தியப் போர் வீரர்களைத்தான் அங்கு அனுப்பினர்.

இந்தியர் 4500 பேர் எத்தியோப்பியாவில் கடைகள் வைத்து வணிகத் துறையில் உள்ளனர். இவர்களில் 3,000 பேர் அட்டிஸ் அபாபாவிலும் 1500 பேர் ஹரார் என்னும் நகரிலும் இருக்கின்றனர். அட்டிஸ் அபாபாவிலுள்ள 3000 இந்திய வணிகரில் 1,000-க்கு மேற்பட்டவர் பாகிஸ்தானியராக இருக்கக்கூடும். பல ஆப்பிரிக்க நாடுகளில் இந்தியரையும் பாகிஸ்தானியரையும் வேறுபடுத்திச் சொல்லும் பழக்கம் கிடையாது.

1888-இல் தான் முதலாவதாக ஓர் இந்தியர் எத்தியோப்பியாவில் கடைவைத்தார். அங்கு வணிகர்களாக இருப்பவர்களில் குசராத்தியரும் மார்வாடிகளுமே குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் சிலர் எத்தியோப்பிய அரசாங்கத்து மர அறுவை ஆலைகளை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். இந்தியாவிலிருந்து நூல், துணி, சாக்கு ஆகியவற்றை இறக்குமதி செய்வதிலும் இவர்கள் சிறந்து விளங்குகின்றனர். 1936 முதல் இத்தாலிய ஆட்சி நடைபெற்ற நான்கு ஆண்டுகளில் இந்தியருக்குக் கூடுதலான வரிகள் விதிக்கப்பட்டன. அவர்கள் பலவாறு கொடுமைப்படுத்தப் பட்டனர்.

எத்தியோப்பியாவை இத்தாலி படையெடுத்த போது, இந்திய மக்கள் அனைவரும் எத்தியோப்பியாவுக்கு அனுதாபம் தெரிவித்தனர். முசோலினி, ஜவஹர்லால் நேருவைச் சந்திக்க விரும்பியும், நேரு அவரைக் காண இசையவில்லை. இந்திய நாளிதழ்கள் எல்லாவற்றிலும் பல மாதங்களுக்கு எத்தியோப்பியாவைப் பற்றிய செய்திகளே வெளி வந்துகொண்டிருந்தன. எத்தியோப்பியாவைப் பிரிட்டிஷார் படையெடுத்து இத்தாலியரை முறியடிக்க முடிவு செய்தபோது, அச்செயலுக்கு இந்தியப் போர்வீரர்களையே பயன்படுத்தினர்;

கோஜ்ஜாம் மலையிலும் எரிட்ரியாவிலும் பெரண்டுவிலும் ப்ளாட் டாப்ஹில்லிலும் நடைபெற்ற போர்களில் இத்தாலியரைத் தோற்கடித்து வெற்றிக்கொடி நாட்டியவர்கள் இந்திய வீரர்களே ஆவர். கரேன் என்னுமிடத்தில் நடைபெற்ற போர், இரண்டாம் உலகப் போரில் மிக முக்கியமான போர் என்பர்; அதில் இராஜபுத்தான வீரர் கண்ட வெற்றியை நினைவூட்டும் விழா இந்தியப் படையினரால் ஆண்டுதோறும் பிப்ரவரி 12–ஆம் நாளில் கொண்டாடப்படுகிறது.

எரிட்ரியாவை எத்தியோப்பியாவுடன் இணைத்துவிட வேண்டும் என்ற கருத்தை ஐக்கிய நாடுகள் அவையில் வலியுறுத்தியும் வற்புறுத்தியும் இந்தியா, எத்தியோப்பியாவுக்கு உறுதுணை புரிந்திருக்கிறது.

இந்தியா 1947 இல் சுதந்தரம் பெற்றது. அடுத்த ஆண்டிலேயே, எத்தியோப்பியாவுக்கு ஒரு நல்லெண்ணக் குழுவை இந்திய அரசாங்கம் அனுப்பி வைத்தது. அதன் பயனாக, இந்தியர் பல நூறு பேர் எத்தியோப்பியாவில் ஆசிரியர்களாகவும் மருத்துவர்களாகவும் பணிபுரிந்து வருகின்றனர். எத்தியோப்பிய மாணவர்கள் இந்தியாவில் கல்வி பயிலுகின்றனர். இந்தியாவுக்குத் தேவைப்படும்போது, எத்தியோப்பியா கோதுமை வழங்குகிறது.

1956-இல் இந்தியாவெங்கும் ஹெய்லி செலாசி சுற்றுப்பயணம் செய்தார். சென்னை மாநகர்க்கும் அவர் வந்திருந்தார். இந்திய மக்கள் அவரை வரலாற்றுக் கண்ணுடன் பார்த்து அன்புடன் வரவேற்றனர். கேரளத்தில் சப்பாடு என்னுமிடத்தில் ஒரு தேவாலயத்தைப் புதுப்பிக்க அவர் கொடை கொடுத்தார்.

எத்தியோப்பியா வாழ் இந்தியர்கள் அட்டிஸ் அபாபாவில் காந்தி நினைவு மருத்துவமனை கட்டி, அதை எத்தியோப்பிய அரசாங்கத்தாரிடம் ஒப்புவித்திருக்கின்றனர்.

காதில் துவாரம் போடுவது, நாகத்தை வழிபடுவது, திருமண வீடுகளிலும் சவச் சடங்குகளிலும் மொய்ப் பணம் எழுதுவது, சாதகத்தில் நம்பிக்கை போன்ற பழக்கங்கள் எத்தியோப்பியரிடம் நிலவுகின்றன. இந்தியாவில் சொல்லப்படுவது போன்ற விடுகதைகள், நாட்டுப்பாடல்கள் ஆகியவையும் அங்கு வழங்குகின்றன.

தொன்றுதொட்டு இணைந்து வாழும் இவ்விரு நாட்டு மக்களிடையே மேன்மேலும் நல்லுறவு பெருகுவதாக.